DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.

Case No:S.C.No.54/2025

Prosecution Witness P.W.5

Name : **திரு.மகாதேவன்** Caste:

Father's Name :**திரு.** Calling :

Village: Religion :

Taluk : Age:

எதிரிகள் ஆஜர்

**நாள்: 03.02.2026.**

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

1. நான் 2021 ஆம் ஆண்டிலிருந்து தேனி ஃபாரஸ்ட் டிவிஷனில் வன காவலராக பணிபுரிந்து வருகிறேன். 2022 ஆம் ஆண்டு முதல் உத்தமபாளையம் தேவாரம் வனசரகத்தில் சங்கராபுரம் வட்டத்தில் பணிபுரிந்து வந்தேன். கடந்த 05.09.2024 ஆம் தேதியன்று இரவு புலிக்குத்தி காப்பு நிலம் அருகில் பிரேதம் ஒன்று இருப்பதாக தகவல் வந்தது. நானும் எனது உடன் இருந்த கனகசுப்பிரமணி என்ற வனக்காவலரும் சேர்ந்து அந்த இடத்திற்கு நாங்கள் கிளம்பி சென்றோம். அங்கு ஆய்வாளர் அவர்கள் சின்னமனூர் காவல் நிலையத்தில் இருந்து வந்து விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். ஆய்வாளர் எங்களை சம்பவயிடத்தில் அழைத்துச் சென்று பிரேதம் இருக்கும் இடத்தை காட்டினார்கள்.

2. ரோட்டை ஒட்டி ரோட்டில் இருந்து 10- 15 அடி தூரத்தில் சங்கரா புரத்திலிருந்து குச்சனூர் செல்லும் வழியில் சாலையின் இடது புறம் அந்த பிரேதம் இருந்தது. என்னிடம் காண்பிக்கக்கூடிய புகைப்படத்தில் பிரேதம் இருந்தது போல் பிரேதம் அந்த இடத்தில் இருந்தது. மாதிரி வரைபடம் தயார் செய்வதாக சொல்லி எங்கள் முன்னிலையில் தயார் செய்தார். அவர்கள் தயார்

செய்த மகஜரில் நான் சாட்சி கையப்பம் செய்தேன் நானும் கனக சுப்ரமணியனும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்னிடம் காண்பிக்கக்கூடிய பார்வை மகஜரிலுள்ள கையெழுத்து என்னுடையது தான், அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.9, கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.10, பிரேதம் அருகில் இருந்த ரத்தக்கரை படிந்த மண் சிறிதளவு மற்றும் மாதிரி மண் சிறிதளவு போலீசார் கைப்பற்றினார்கள். அவ்வாறு கைப்பற்றப்பட்ட சான்றிழும் நாங்கள் அத்தாட்சி கையெழுத்து செய்தோம். ரத்தம் தோய்ந்த மண் மற்றும் மாதிரி மண் சா.பொ.4 மற்றும் 5 ஆய்வாளர் வழக்கு தொடர்பாக என்னை விசாரணை செய்தார்.

**<u>நீதிமன்ற கேள்வி</u>**

அந்தப் பகுதியில் என்ன மாதிரியான வனவிலங்குகள் நாங்கள் ரோந்துக்கு செல்லும் பொழுது பார்த்திருக்கிறோம் என்றால் முயல், மலைப்பாம்பு, கேலையாறு ஆகியவற்றை பார்த்திருக்கிறேன். அந்தப் பகுதியில் காட்டு மாடுகள் பார்த்ததில்லை வனப் பகுதியில் காட்டு மாடுகள் வராது.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. புகார்தாரர் சங்கிலி ராஜா மற்றும் வனவர் பிரின்ஸ் டேனியல் எங்கள் அலுவலகத்தில் பணிபுரியும் உயர் அதிகாரிகள் என்றால் சரிதான். இந்த சம்பவம் தொடர்பாக புகார் யார் கொடுத்தார்கள் என்று எனக்கு குறிப்பிட்டு நேரம் தெரியாது. எனக்கு தகவல் யார் கொடுத்தது என்றால் எங்கள் அலுவலகத்திலிருந்து தகவல் சொன்னார்கள். போலீசார் யாரும் எங்களுக்கு தகவல் சொல்லவில்லை. நாங்கள் சம்பவ இடத்திற்கு சென்ற பொழுது டேனியல் அந்த இடத்தில் இல்லை.

2. நாங்கள் சம்பவ இடத்திற்கு செல்லும்போது 10.00 மணிக்கு மேல் இருக்கும். எனக்கு யார் தகவல் சொன்னார்கள் என்ற விபரத்தை நான் பெயர் குறிப்பிட்டு போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை. நான் போகும்போது ஏற்கனவே மகஜர் தயார் செய்து வைத்திருந்ததில் கையெழுத்து போட்டோம் என்றால் சரியல்ல. அங்கு எத்தனை வகை பாலங்கள் உள்ளது எத்தனை தடுப்பு

சுவர்கள் உள்ளது என்று எனக்கு சரியாக தெரியாது பக்கத்தில் ஒரு பாலம் இருந்தது. பலவகைப்பட்ட பாலங்கள் உள்ளது தெரியுமா என்றால் அதுபற்றி தெரியாது.

3. சாட்சி நீதிமன்றத்தில் உள்ள வழக்கறிஞர் மேஜை கடைசி காட்டி அவ்வளவு தூரம் இருக்கும் என குறிப்பிடுகிறார் சுமார் அது 25 அடி தூரம் இருக்கும். பிரேதம் எந்த திசையை பார்த்து படுத்திருந்த திசை எனக்கு தெரியும். பிரேதம் தலை தெற்கு திசை நோக்கி கால் வடக்கு திசையை நோக்கி இருந்தது. அந்த பகுதியில் எத்தனை விளக்குகள் உள்ளதென்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி விவரங்கள் எனக்கு தெரியாது.

4. எத்தனை வளைவுகள் உள்ளதென்ற விவரமும் எனக்கு குறிப்பிட்டு சொல்ல முடியாது. சங்கரா புரத்திலிருந்து வரும் பொழுது சாலை வளைவான சாலை என்பதால் முகப்பு விளக்கு வெளிச்சத்தில் பிரேதம் இருக்கும் இடம் நன்றாக தெரியும் என்றால் சரியல்ல, அன்றைய தினம் நன்றாக இருட்டாக இருந்தது, பிரேதத்தை பார்த்தவுடன் எங்களுக்கு பதட்டம் ஆகிவிட்டது. ரோட்டில் இருந்து பொத்தாம் பொதுவாக டார்ச் லைட் அடித்து பார்த்தால் பிரேதம் இருக்கும் இடம் தெரியாது என்றால் சரிதான் நான் அன்றைக்கு தான் அந்த இடத்திற்கு முதல்முறையாக செல்கிறேன். கைப்பற்றப்பட்ட ரத்தம் மனித ரத்தமா அல்லது மிருக ரத்தமா என்று அறுதியிட்டு சொல்ல முடியுமா என்றால் மனித ரத்தம் தான் போலீசார் எங்களிடம் காட்டிவிட்டுதான் அதை கைப்பற்றினார்கள். அந்த இடங்களில் மிருகங்கள் நடமாட்டம் இருக்கும் என்றால் பொதுவாக காடுகளில் மிருகங்கள் இருக்கும்.

5. அந்த மிருகங்களால் தாக்கப்பட்டு அவரது உயிர் இறப்பதற்கு வாய்ப்பு உள்ளது என்றால் அந்த அளவுக்கு கொடிய மிருகங்கள் எதுவும் அந்தப் பகுதியில் கிடையாது. நான் வழக்குக்காக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றும், அந்த பகுதியில் காட்டு மாடுகள் மற்றும் விலங்குகள் அதிகம் நடமாட்டம் பகுதி என்றால் சரியல்ல. அந்த பார்வை மகஜரை ரைட்டர் எழுதி கையெழுத்து

வாங்கினார் என்றால் சரியல்ல. ஆய்வாளர் தான் அந்த பார்வை மகஜரை எழுதி எங்களிடம் கையெழுத்து பெற்றார் இரவு 10:45 மணி அளவில் எங்களிடம் கையெழுத்து பெறப்பட்டது. அதன் பிறகு காவல் நிலையத்திற்கு நாங்கள் சென்று என்ன நடந்தது என்ற விபரத்தை முறையாக ஆய்வாளரிடம் வாக்குமூலமாக சொன்னோம். என்னென்ன விபரங்கள் பார்த்தோம் என்று ஆய்வாளர் எங்களிடம் கேட்டார். நாங்கள் தகவல் சொன்னோம். நான் தான் முதலில் ஆய்வாளரிடம் தகவல் சொன்னேன். சம்பவயிடத்தில் முடித்துவிட்டு நாங்கள் காவல் நிலையத்திற்கு சென்றோம், அங்கு என்னை விசாரிக்கவில்லை. நான் அன்றைய தினம் பணியில் இல்லை என்றும், அது சம்மந்தமான ஆவணம் ஏதும் ஒப்படைக்கவிலை என்றால் சரியல்ல. அலுவலகத்தில் வைத்து போலிசார் கையெழுத்து வாங்கி கொண்டார்கள் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN
Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.02.03 18:37:37 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.